செ.வெ.எண்: 996

11/11/2010

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியத்தின் 8வது வாரியக்கூட்டம் 10.11.2010 அன்று மாலை 03.00 மணிக்கு சமூகநல இயக்கக கூட்ட அரங்கில் மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் ஆணைய தலைவி திருமதி. எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூகநலத் துறை முதன்மை செயலர் திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., மற்றும் சமூகநல இயக்குநர் திருமதி. இரா. வாசுகி, இ.ஆ.ப., மற்றும் அரவாணிகள் நல வாரியத்தின் அலுவல் சார் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம் 15.04.2008 அன்று துவங்கப்பட்டு அரவாணிகள் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. அரவாணிகள் நல வாரியத்தின் மூலம் இதுவரை 3804 அரவாணிகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு அரவாணி என தெரிவு செய்யப்பட்ட 2617 அரவாணிகளுக்கு அடையாள அட்டைகளும், 1213 நபர்களுக்கு குடும்ப அட்டைகளும், 133 நபர்களுக்கு தொகுப்பு வீடுகளும், 100 நபர்களுக்கு தையல் இயந்திரங்களும், 522 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களும், 517 நபர்களுக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ அட்டைகளும் மாவட்ட வாரியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரவாணிகள் நல வாரியத்தின் மூலம் அரவாணிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் 2008–09 ஆண்டில் ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.25.53 இலட்சம் நிதியுதவி விழிப்புணர்வு மற்றும் கணக்கெடுப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது. அரவாணிகளுக்காக 150 சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்கு ரூ.6.09 இலட்சமும், சுயதொழில் துவங்க ரூ.64 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. நவீன ஆபரணங்கள் தயாரித்தல், தையல் பயிற்சி, அழகுக் கலை பயிற்சி, ஓவியப்பயிற்சி ஆகியவற்றிற்காக ரூ.6.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பூ வேலைப்பாட்டுடன் கூடிய தையல் இயந்திரம் வழங்க ரூ.7.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அரவாணிகளுக்கான இடைக்கால தங்கும் விடுதிக்காக இவ்வரசு ரூ. 3,57,500/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் இதுவரை ரூ. 2,68,860/– செலவிடப்பட்டுள்ளது. தற்போது 2010-11 ஆண்டில் அரவாணிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் வாரியத்திற்கென ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9